எழுத்தாளர் தொ. பத்தினாதன் பதினாறு வய[illegible], முப்பது வருடங்களைக் கழித்தவர். அரசின் கண்காணிப்புக் கெடுபிடி[illegible] காலம் தூரத்தத் தன்னை மறைத்துச் சின்னச் சின்ன வேலைகளைச் செய்து வாழ்க்கையை ஓட்டியவர். எனினும் அகதியாக வாழ்வை முடித்துக்கொள்ள விரும்பாத அடிமன விருப்பம் இவரை எழுத்துக்குள் கொண்டுவந்தது. 'போரின் மறுபக்கம் ஈழ அகதியின் துயர வரலாறு' தன்வரலாற்றுப் பதிவையும் 'தமிழகத்தின் ஈழ அகதிகள்', 'தகிப்பின் வாழ்வு' ஆகிய கட்டுரைத் தொகுப்புகளையும் எழுதியுள்ள இவர், தமிழகத்து அகதிகளுக்குக் குடியுரிமை வழங்க வேண்டுமெனத் தொடர்ந்து வலியுறுத்தி வருபவர். நீண்ட போராட்டத்திற்குப் பிறகு தாய்நிலம் திரும்பத் தயாராகிக்கொண்டிருந்த சூழலில் நிகழ்த்திய நேர்காணலின் பகுதிகள்.



நேர்காணல்: தொ. பத்தினாதன் | சந்திப்பு: பா.ச. அரிபாபு

# நான் போரின் சாட்சி

**நீங்கள் ஈழத்து எழுத்தாளரா அல்லது தமிழ்நாட்டு எழுத்தாளரா அல்லது அகதி எழுத்தாளரா? உங்கள் மனம் எதை விரும்புகிறது அல்லது எப்படி அழைக்கப்பட வேண்டும் என்று விரும்புகிறீர்கள்?**

இதுவரைக்கும் மூன்று நேர்காணல் கொடுத்துள்ளேன். எதிலும் இதுமாதிரி கேள்வியை எதிர்கொள்ளவில்லை.

எனக்குத் தெரிந்து தமிழ்த் தேச அரசியலுக்குள்ளேயும் இலக்கியத்துக்குள்ளேயும் அகதிகள் குறித்த பேச்சோ பதிவோ இல்லை. இலங்கையிலிருந்து ஐரோப்பிய நாடுகளுக்கும் தமிழகத்திற்கும் புலம்பெயர்ந்தவர்கள் இலட்சக்கணக்கில் இருக்கிறார்கள். இதில் ஐரோப்பிய நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தவர்கள் கல்வி, பொருளாதாரம், சமூக அமைப்பில் மேம்பட்டவர்களாக இருப்பதால் அவர்களைப் பற்றிப் பேசுவதற்கான வாய்ப்புகள் உருவாகின. அதேவேளையில் தமிழ்நாட்டிற்கு வந்தவர்கள் மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர். இதில் வசதியுள்ளவர்கள் வேறு நாட்டிற்குச் சென்றுவிட இன்று கிட்டத்தட்ட அறுபத்தைந்தாயிரம் பேர் அகதி முகாம்களில் வாழ்ந்துவருகிறார்கள். இங்கு கவனிக்க வேண்டியது, 'அகதி' என்ற சொல்லாடல் இருக்கிறதே தவிர 'சட்ட விரோதக் குடியேறிகள்' என்றுதான் அழைக்கப்படுகிறார்கள்.

தமிழ்நாட்டுச் சூழலிலிருந்து எழுதக் கூடிய ஒருவரையும் ஐரோப்பியச் சூழலிலிருந்து எழுதக்கூடிய ஒருவரையும் எப்படி ஒப்பிட முடியும்? எதைப் புலம்பெயர் இலக்கியம் என்று சொல்வீர்கள்? இது குறித்து கவிஞர் சுகுமாரனிடம் தீவிரமாக நீண்ட விவாதம் செய்திருக்கிறேன். அவர் "சேரன் எழுதுவதும் பத்திநாதன் எழுதுவதும் ஒன்றாகிவிடாது. இடப்பெயர்வு ஒரே காரணமாக இருந்தாலும் அவர் பேராசிரியர் பணியை மேற்கொண்டு, வசதியான சூழ்நிலையில் எழுதுகிற மனநிலைக்கும் இங்கு வெளியே(space)இல்லாமல் மிகுந்த சிரமங்களுக்கிடையே வெடித்து வெளிவரும் எழுத்துக்களைப் படைக்கிற பத்திநாதனுக்கும் நிச்சயம் வேறுபாடு உண்டு" என்றார். ஆக, பொதுத்தளத்தில் 'புலம்பெயர் இலக்கியம்' என்று ஒற்றை வார்த்தையில் சொல்லிவிட முடியாது.

நானும் சுகுமாரனும் உரையாடியதிலிருந்து 'ஏதிலியர் இலக்கியம்' என்று சொல்லலாம் என்ற முடிவுக்கு வந்தோம். இந்தச் சொல்லாடலை முன்னெடுப்பதோடு இதுதொடர்பாக ஒரு கருத்தரங்கையும் நடத்தலாம் என்று முடிவுக்கு வந்தோம். ஆனால் இப்படி ஒரு நிகழ்ச்சியை நடத்துவது சவாலான காரியம் அல்லவா? ஆதலால் கடைசிவரை நடத்த முடியாமலே போய்விட்டது. இறுதியாக நண்பர் 'எழுத்து' அலெக்ஸ் உதவி புரிவதாகச் சொன்னார். விரைவாக மரணம் அவரை அழைத்துக்கொண்டதால் அந்த முன்னெடுப்பும் தடைப்பட்டுவிட்டது. 'ஏதிலியர் இலக்கியம்' என்பது விளிம்பிற்குள்ளிருந்து எழுவது. தமிழ்நாட்டுச் சூழ்நிலையைப் பொறுத்தவரை எது ஏதிலியர் இலக்கியம் என்பதைவிட ஏன் ஏதிலியர் இலக்கியம் இல்லை என்ற கேள்வியை எழுப்பிப் பார்க்கலாம்.

முகாம்களுக்கிடையே எழுதுவதற்கு விடயம் கொட்டிக்கிடக்கிறது. ஆனால் எழுத ஆள் இல்லை. அதனால் முகாமிற்குள்ளேயே எழுதுவதற்குப் பயிற்சி அளிக்க முடிவு செய்தோம். சரிவரவில்லை. பெரிய சவாலாக இருந்தது. இங்கு, பத்திநாதன் ஈழத்துப் படைப்பாளிகளுக்குள்ளும் சேரவில்லை. அவர்களும் தமிழக அகதிகள் குறித்துப் பேசவில்லை. குழப்பம்தான். அவன் உதிரியாக இருக்கிறான்.

**உங்களது 'போரின் மறுபக்கம்: ஈழ அகதியின் துயர வரலாறு' என்னும் நூல் மிகமுக்கியமான வரவு. எல்லா ஈழ அகதிகளையும்போல சாதாரண வாழ்க்கை வாழ்ந்து உழன்றாலும் எப்போது எழுத வேண்டும் என்று முடிவெடுத்தீர்கள்?**

பதினாறு வயதில் முகாமிற்கு வந்தேன். அடுத்த எட்டு ஆண்டுகள் எப்படி கடந்தன என்று எனக்குத் தெரியவில்லை. இக்காலகட்டத்தின் இறுதிப் பகுதியில் அகதிமுகாம்களின் அதிகாரிகளோடு பிரச்சினை ஏற்பட்டது. முகாம்களுக்குள் இருக்கும் நடைமுறை என்னை வெளியே துரத்தியது. முகாமைவிட்டு வெளியேறிப் போனதற்குப் பிறகு நடைமுறை வாழ்க்கை அவ்வளவு எளிமையானதாக இல்லை. பாதுகாப்பு இல்லை. சதாகாலமும் கண்காணிக்கப்படுவதாக நினைக்கும் அதே வேளையில் அடிப்படை வசதிகளற்று வாழவேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியது. தமிழ்நாட்டில் 'அகதி' என்னும் அடையாளத்தைச் சுமந்துகொண்டு வாழவே முடியாது. அப்போது மறைக்க வேண்டிய கட்டாயத்திற்குச் சென்றேன். சென்னையில் வாழ்ந்த பத்து ஆண்டுகளும் மறைந்துதான் வாழ்ந்தேன். இக்காலகட்டத்தில்தான் யோசிக்கத் தொடங்கினேன். இது ஒரு பத்திநாதனுக்கான பிரச்சினை மட்டும் அல்ல. என்னைப்போல ஆயிரக்கணக்கானோர் இருப்பதை உலகத்திற்குச் சொல்ல முடிவெடுத்தேன். கிட்டத்தட்ட என்னுடைய வாழ்க்கையைப் பணயம் வைத்து எழுதியதுபோலத்தான். தடா சட்டம் நடைமுறையில் இருந்தபோது எழுதினேன். இதனைப் பதிப்பிக்க யாரும் முன்வரவும் இல்லை.

நான் நினைத்திருந்தால் சென்னை வாழ்க்கையில் கலந்திருக்க முடியும். ஏதாவது ஒரு பெண்ணைத் திருமணம் செய்துகொண்டு 'ஓட்டுக் கார்டு', 'ரேசன் கார்டு' வாங்கி இயல்பான வாழ்க்கைக்குத் திரும்பியிருக்க முடியும். ஆனால் உலகத்திற்கு எப்படி தெரியும்? என்னைப்போல வாழும் அகதியின் துயரைச் சொல்லவும், தமிழ்நாட்டின் எதார்த்தத்தை விளக்கவும் முடிவு செய்தேன்.

**உங்களது படைப்பில் மெல்லிய இழையாக பிரதி முழுவதும் குடும்பத்தின் பிரிவும் அம்மாவின் ஏக்கமும் ஆழமாகப் பதிவாகியுள்ளன. இந்த இரண்டு பிரிவுகள் குறித்துச் சொல்லுங்கள்.**

என்னைப் பதின்மூன்று வயதிலேயே ஹாஸ்டலில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டார்கள். அங்கு எனக்கு மகிழ்ச்சி இல்லை. எனக்கு நான்கு வயதிருக்கும்போது அப்பா இறந்துவிட்டார். நான் பிறந்த நேரம் சரியில்லாமல்தான் அப்பா இறந்துபோனார் என்று அம்மா சொல்லக் கேட்டிருக்கிறேன். ஆக, என்னுடைய வாழ்வில் அப்பாவின் சிறுதடம் கூட இல்லை. அம்மாதான் எல்லாமும்.

பதினாறு வயதில் சகோதரர்களோடு சேர்ந்து அகதியாகத் தமிழகம் வந்தேன். தொடர்ந்து அம்மாவின் உறவு விலகியிருப்பதால் அம்மா குறித்தான ஏக்கம் மறைந்து வெறுப்புதான் அதிகமானது. இதைத்தான் விரிவாக எழுதியிருக்கிறேன். அம்மாவிடம் நான் கேட்கும் முதல் கேள்வியே என்னை ஏன் பெத்தே, என்னை இப்படித் தவிக்க விட்டுட்டாயே என்பதுதான். தொடக்கத்திலிருந்தே அம்மாமீதான செண்டிமெண்ட் இல்லாமல் எதிரான உரையாடலே எப்போதும் வெளிப்படும். நெருக்கமான நண்பர்களோடு உரையாடும்போதுகூட அம்மா பற்றிய எதிர்வினையையே பதிவு செய்வேன்.

இன்னும் கூடுதலாகச் சொல்வதானால் அண்ணன், அக்காமார்களிடம் பேசும்போது 'அம்மா' என்றுகூடச் சொல்லமாட்டேன். அம்மாவின் பெயரைத்தான் அதாவது 'குணசீலி' என்றுதான் கூறுவேன். இன்றுவரைக்கும் அது தொடர்கிறது. ஆனால் இந்தமாதிரி பேசுவதற்குக் காரணம் அம்மா மீதான ஏக்கம்தான் என்பதைப் பிறகு உணர்ந்துகொண்டேன். இளமையில் கிடைக்காத அம்மாவின் பாசம் பிறகு வெறுப்பாக மாறிவிட்டது.

நான் பெரிய குடும்பத்தின் கடைசிக் கண்ணி. பன்னிரண்டாவது குழந்தை. என்னுடைய மூத்த அக்காளின் மூத்த மகளுக்கும் எனக்கும் ஒரே வயது. ஒரு பெரிய குடும்ப உறவுகளுக்குள் பிறந்து வளர்ந்த நான் அந்நியப்பட்டுப் போகும்போது வெளிப்படும் மனவியல்பு. நம்மை யாரும் கைவிட மாட்டார்கள் என்று குடும்பத்தின்மீதும் அக்கா, அண்ணன்மார்களின்மீதும் ஒரு எதிர்பார்ப்பு இருந்துகொண்டே இருந்தது. ஆனால் இடப்பெயர்வு வாழ்வு விளிம்பிற்குத் தள்ளிவிட்டு வேடிக்கை காட்டியது. எந்த உறவுகளோடும் தொடர்பில் இல்லாமல் தாயின் அரவணைப்பு இல்லாமல் தனிமையில் உழலும்போது வெளிப்படும் உளவியலின் வெளிப்பாடு. அதனால்தான் உளச்சிக்கலுக்கு ஆளானேன்.

நானாகவே வெறுப்பை உண்டாக்கிக்கொண்டேனே யொழிய அம்மா மீதான ஏக்கம் அப்படியேதான் இருக்கிறது.

**ஒருவாரத்தில் சொந்த நாட்டிற்குத் திரும்பப் போகிறீர்கள். உங்களுக்கும் அம்மாவுக்குமான உறவு எப்படி அமையும்?**

'போரின் மறுபக்கம்' எழுதிக்கொண்டிருந்த 2009 காலத்தில் உடல் சுகம் இல்லாமல் அம்மாவை மருத்துவமனையில் சேர்த்திருந்தார்கள். அம்மா என்னிடம் பேச விரும்புவதாக அலைபேசி வழியாகத் தொடர்புகொண்டார்கள். நான் பேசவில்லை. தைரியம் இல்லை. அண்ணன்களும் அக்காக்களும் வருத்தப்பட்டார்கள். நான் பேச விரும்பிய 23–24 வயதிலேயே அம்மாவிற்குக் கண்ணிலும் காதிலும் பிரச்சினை ஏற்பட்டுவிட்டது. நான் பேசியிருந்தால்கூட அவரால் அடையாளம் கண்டிருக்க முடியாது. கடைசியாக 2013இல் இறந்துவிட்டார். இறந்தபோது சகோதரிகள் அலைபேசியில் அழைத்து அழுதபடியே தகவலைச் சொன்னார்கள். எனக்கு அழுகை வரவில்லை. நான் தொடர்பைத் துண்டித்துவிட்டேன். அம்மாவின் இறப்பு எனக்கு ஒரு தகவலாகவே இருந்தது. அம்மாவிற்காக ஒரு சொட்டுக்கண்ணீர் சிந்தவில்லை. என்னுடன் இருந்த நண்பர்கள் கல்நெஞ்சம் கொண்டவன் என்று திட்டினார்கள். என்னை அழச் சொன்னார்கள். இருபத்தைந்து ஆண்டுகளுக்கும் மேல் அம்மாவோடு தொடர்பே இல்லை.

1990களிலிருந்து 2009 வரைக்கும் நாட்டுச் சூழல் முற்றிலும் மாறிப்போய்விட்டது. அதிலும் 2007 –2009 வரையிலான இறுதிக்கட்ட போர்க்காலங்களில் அம்மா உயிரோடு இருப்பதற்கான சாத்தியம் இல்லை என்றே நம்பியிருந்தேன். எனக்கு அம்மாவின் முகமும் குரலும் ஞாபகத்தில் இல்லை. அம்மாவின் இறப்பன்று ஒருநாள் விடுமுறை எடுத்துக்கொண்டேன். அவ்வளவுதான். ஊருக்குத் திரும்பிச் சென்று என்ன செய்யப்போகிறேன் என்கிற எந்தத் திட்டமும் இல்லை. நான் போரின் சாட்சி.

**அம்மாவின் பிரிவிற்குப் போர் மட்டுமே எப்படி சாட்சியாக முடியும்? நீங்கள் நினைத்திருந்தால் அம்மாவிடம் சென்றிருக்கலாம் இல்லையா? அம்மாமீது இவ்வளவு ஒதுக்குதல் ஏன், பாவம் இல்லையா?**

அப்படி இல்லை. முதலில் எனது பள்ளி வாழ்க்கை தடைப்பட்டது. பிறகு எனது குடும்ப உறுப்பினர்களும் நானும் விரும்பிய பாதிரியாருக்குப் படிக்க வேண்டும் என்கிற கனவு சிதறியது. அம்மாவைப் பிரிந்தது. முகாம் வாழ்க்கையை அனுபவித்தது. எல்லாமே போரினால் வந்ததுதானே. ஒருவேளை போர் இல்லாவிட்டால் அம்மாவோடு இருந்திருப்பேனே. ஆனால் போர் என்னைத் துரத்திவிட்டது. காலமும் சூழலும் ஏற்படுத்திய பயங்கரத்தில் அம்மாவோடு கடைசிவரைக்கும் உறவைத் தொடரமுடியாமலே போய்விட்டது.

**உங்கள் பிரதியை வாசித்த பிறகுதான் தெரிகிறது உங்களுக்கு 'சுதாகரன்' என்ற மற்றுமொரு பெயர் இருப்பது; ஏன் இந்தப் பெயர் மாற்றம்?**

நான் கிறிஸ்துவப் பின்னணி கொண்டவன். எங்கள் வீட்டில் பொதுவாக இரண்டு பெயர்கள் இருக்கும். செல்லமாக வீட்டில் அழைக்கும் பெயர்; பள்ளிச் சான்றிதழில் மற்றொரு பெயர். வீட்டில் அழைப்பது சுதாகரன். பள்ளிக்கூடத்தில் பத்தினாதன். ஊருக்குள் சுதாகரன் என்றால்தான் தெரியும். சகோதரர்களோடு தமிழ்நாட்டிற்கு வந்து முகாமில் பதியும்போது 'சுதாகரன்' என்று பதிந்துவிட்டார்கள். பெயரே பின்னாளில் பெரிய சட்டச் சிக்கலை உருவாக்கும் என்று யாரும் யோசிக்கவில்லை. 1998 வரைக்கும், முகாமில் சுதாகரனாகவே வாழ்ந்துவந்தேன்.

சுதாகரன் என்னும் பெயர் இலங்கையில் எந்த ஆவணத்திலும் இல்லை. தமிழ்நாட்டில் பத்தினாதன் என்னும் பெயரில் ஆவணம் இல்லை. சுதாகரன் என்னும் பெயரில் முகாமில் வாழ்ந்தபோது வாழ்க்கை ஒன்றும் சுகமானதாக இல்லை. இளமை தந்த துடுக்கில் அலைந்த காலம். கூடாத சகவாசம் அதிகரித்து, குடிப்பழக்கம் உச்சத்திற்குச் சென்று, விபச்சாரியிடமும் செல்லத் துணிந்த காலம். அடிதடி சண்டை, ரவுடித்தனம் சேர்ந்து இறுதியாக மதுரை ஜெயிலில் மூன்று நாட்கள் அடைக்கப்பட்டேன்.

இதே காலகட்டத்தில் ஒயின் பாரில் சரக்கை ஊற்றிக் கொடுக்கக்கூடியவனாக, பெயின்ட் அடிக்க, கல் உடைக்க, விறகு வெட்ட, கட்ட வேலைக்கு என எல்லா வேலைகளையும் பாரபட்சமின்றிச் செய்தேன். அதனால் எனக்கே சுதாகரன் உவப்பான பெயர் இல்லை; விரும்பவும் இல்லை. காட்டானாகத் திரிந்தவன் சுதாகரன். பிறகு ஒயின் ஷாப்பிலிருந்து மாறி சென்னை ஹோட்டல்களுக்குச் செல்லும்போது நண்பர்கள் என்னை மாற்றிவிட்டார்கள். சென்னையிலும் சுதாகரன்தான். ஆனால் நல்ல வேலையை நோக்கிப் போய்க்கொண்டிருக்கும் சுதாகரன். ஸ்டார் ஹோட்டல்களில் இரண்டு வேளை உணவு சாப்பிட்டுக்கொண்டு வேலை செய்யும் அளவிற்கு உயர்ந்துவிட்டேன். முகாமிலிருந்த சுதாகரன் மோசமானவன். சென்னையிலிருந்த சுதாகரன் நல்லவன். சுதாகரன் பெயரிலேயே, போலியாக 1998இலிருந்து 2008 வரை வாழ்ந்துவிட்டேன். ப்ளாட்பார்ம் வாழ்க்கையிலிருந்து ஐந்து நட்சத்திர ஹோட்டல்களில் இருக்கும்வரைக்கும் போலியாக இருந்துவிட்டேன். நல்ல சம்பளம். அந்த வாழ்க்கையிலேயே கலந்திருக்க முடியும். யாருக்குமே தெரிய வாய்ப்பில்லை. ஆனால் இந்த வாழ்க்கையை விரும்பவில்லை.




சி. மோகன்

விலை ரூ. 180

தடாகம் வெளியீடு

இணையதளத்தில் புத்தகத்தைப்பெற

http://bit.ly/2I6uHSD

தொடர்புக்கு

89399 67179


**நீங்கள் அடிமட்ட வேலைகளைச் செய்துகொண்டு பொருளாதார நெருக்கடி, நண்பர்களோடும் உறவுகளோடும் ஏற்பட்ட முரண்பாடு, அகதி என்னும் சொல் தந்த மோசமான வலி, அகச்சிக்கல், பாலியல் நெருக்கடி என நகர்ந்துகொண்டிருந்த காலத்தில் எழுத முடிவுசெய்து மனம் மாறியதைக் குறித்துச் சொல்லுங்கள்**

மதுரையிலிருந்து சென்னைக்கு மாறியபோது எனக்கு வாய்த்த நண்பர்கள் நல்ல நிலையிலிருந்தவர்கள்; படித்தவர்கள். அவர்களது அப்பா அம்மாக்கள் அரசு வேலைகளில் இருந்தார்கள். நல்ல குடும்பப் பின்னணி கொண்டவர்கள். இக்காலகட்டத்தில் செந்தில் என்னும் நண்பனோடு ஏற்பட்ட நட்பு என்னை மாற்றியது. உளவியல் ரீதியாக மீட்டெடுத்தவனும் அவன்தான். அக்காலகட்டத்தில் அறை நண்பர்கள் வாசித்துக்கொண்டிருப்பார்கள். அவர்கள் வாசிப்பதைப் பார்த்து நானும் வாசிப்பேன்.

நவீன இலக்கியம் பற்றி எந்தப் புரிதலும் இல்லை. இலக்கியப்போக்குகளைப் புரிந்துகொள்ளும் மனநிலையும் இல்லை. நண்பர்கள் எடுத்துவந்த புத்தகங்கள் ஓஷோ, அப்துல் கலாம், விவேகானந்தர், காந்தி, கொஞ்சம் வைரமுத்து இவர்களை வாசிக்கும்போதே நாமும் எழுதலாம் என்று தோன்றிவிட்டது.

எழுதலாம் என்று முடிவெடுத்தவுடன் எதை எழுதுவது என்ற கேள்வி எழுந்தது. நமக்கு என்ன தெரியும் என்று யோசிக்கும்போதுதான் நம் கதையே எழுதப்படாமல்தானே இருக்கிறது. அதை எழுதலாம் என்று முடிவுக்கு வந்தேன். ஆனால் அதை யாரும் அங்கீகரிக்கவில்லை. பதிப்பக முதலாளிகள் அகதி முகாம் வாழ்க்கையைக் கண்டு அஞ்சினார்கள். புத்தகம் வெளிவர வேண்டும் என்ற தீவிர நோக்கத்தின் காரணமாக வேலையையும் விட்டுவிட்டேன். ஒன்று மட்டும்தான் எனக்குத் தெளிவிருந்தது. அந்தக்காலத்தில் புலிகள் இருந்தார்கள். இராணுவமும் தீவிர கண்காணிப்புடன் இருந்தது. ஆதலால் அகதி முகாம் குறித்து எழுதலாம் என்ற முடிவுக்கு வந்தேன்.

**உங்களுக்கு வெவ்வேறு அனுபவங்கள் கிடைத்துள்ளன. முகாம் வாழ்க்கை, சென்னை வாழ்க்கை, ஹோட்டல்களில் வேலை செய்த அனுபவம், உறவுச்சிக்கல், பசி, காமம், துரோகம், அலைக்கழிப்பு என அனைத்தும் இலக்கியத்திற்கான ஆழமான கருப்பொருட்கள். இவற்றைக் கொண்டு சிறுகதை வடிவத்திற்கோ நாவல் வடிவத்திற்கோ சென்றிருக்க முடியும். ஆனால் நீங்கள் செல்லவில்லை. அதனால்தான் கேட்கிறேன். உங்கள் கதையை ஏன் எழுத வேண்டும்? படைப்புச் செயல்பாடு ஒருவகையில் அரசியல் செயல்பாடும் அல்லவா?**

உண்மைதான். அகதி முகாம் வாழ்க்கை என்னை அவ்வளவு துன்புறுத்தியது. அகதி முகாமை விட்டு வெளிவந்ததற்குப் பிறகும்கூட அதிகாரிகளோடு உரசல் இருந்து வந்தது. அகதி என்னும் சொல் என்னை விடாது துரத்தியது. அதிகாரிகளின் தொந்தரவு காரணமாக இந்த அமைப்பிற்குள் வாழ முடியாமல் வெடித்துக்கொண்டு வெளியே வந்தேன்.

சென்னையில் ஏன் நாம் மறைந்து வாழ்கிறோம் என்று நினைக்கும்போது என் வாழ்க்கையே சாட்சி. என்கண்முன்னே நிற்பது போர்; மற்றொன்று அகதி வாழ்க்கை. இவற்றைச் சொல்ல வேண்டிய தேவை இருப்பதாக உணர்ந்தேன். என் பிரச்சினையை முன்வைக்க வேண்டியது அவசியம் என்றும் உணர்ந்தேன். மேலும் என் கதையை எழுதாமல் இருந்திருந்தால் மன நோயாளியாக மாறியிருப்பேன். எழுத்தில் என்னை முழுமையாக இறக்கி வைத்ததாக உணர்கிறேன். பெரிய மனவலியிலிருந்து மீண்டதாக நினைக்கிறேன். கொஞ்சம் கூடுதலாக ஆசைப்பட்டேன் என்றுதான் சொல்ல வேண்டும். அதாவது எனது அகதி வாழ்க்கையைப் படித்துவிட்டு அகதிமுகாமின் தோற்றம் முற்றிலும் மாறிவிடும் என்று நம்பினேன். ஆனால் ஒன்றுமே நடக்கவில்லை; பெரிய ஏமாற்றம்.

**இதனைத் தொடர்ந்து ஒரு கேள்வியைக் கேட்டுவிடலாம் என்று நினைக்கிறேன். தற்போதிய அகதிமுகாம் குறித்து?**

கிட்டத்தட்ட 1983இலிருந்து முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக அகதி முகாம்கள்



இருக்கின்றன. மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்டோர் இங்கு வந்ததில், கணிசமானவர்கள் வெளிநாடுகளுக்குப் போய்விட்டார்கள். முகாம்களுக்கு வெளியே வாழ்பவர்களுக்கு அரசு எந்த உதவியும் செய்வதில்லை. அவர்கள் சொந்த உடலுழைப்பில் வாழ்கிறார்கள். முகாம் சூழலைப் பொறுத்தவரை தமிழகத்தில் நூற்று-ஆறு அகதி முகாம்களும் ஒரு சிறப்பு முகாமும் உள்ளன. (திருச்சி மத்தியச் சிறை வளாகத்தில் இருக்கிறது)

நூற்று-ஆறு அகதி முகாம்களில் அறுபத்தைந்தாயிரம் பேர் வாழ்கிறார்கள். இருபத்தைந்து மாவட்டங்களில் முகாம்கள் இருக்கின்றன. முகாம்களில் வாழ்பவர்கள் அனைவரும் விளிம்புநிலை மனிதர்கள். கல்வி, வேலைவாய்ப்பில் பின்தங்கியவர்கள். அறுபத்தைந்தாயிரம் பேரில் முப்பதாயிரம் பேர் இந்தியப் பூர்வீகத் தமிழர்கள். சிறிமா ஒப்பந்தத்தின்படி மலையகத்திற்குச் சென்றவர்கள். இவர்களுக்கு இப்போதும் அங்கு சொத்து, வீடு என எதுவும் இல்லை.

2009 போர் முடிவுக்குப் பிறகு ஏன் சொந்த நாட்டிற்குச் செல்லவில்லை என்று பலர் கேட்டதுண்டு. முன்னமே குறிப்பிட்டதுபோல சட்ட விரோதக் குடியேறிகளாகிய நாங்கள் அங்கு செல்வது அப்படி ஒன்றும் சாதாரணமான விஷயம் அல்ல; அங்கு பல தடைகளைத் தாண்ட வேண்டியிருக்கும். அதிலும் போக, அங்கு சென்றாலும் குடியிருக்க வீடில்லை; மற்ற எதுவும் இல்லை; அங்கும் அகதிதான்.

மேலும் முப்பது ஆண்டுகளாக இந்தச் சூழலுக்குள் வாழ்ந்து பழகிவிட்டார்கள். குழந்தைகள் படித்து ஏதோ ஒரு வேலையைச் செய்துகொண்டிருக்கிறார்கள். அங்கு சென்று வாழ்வதும் திண்டாட்டம்தான். இலங்கை மண் தெரியாத புதிய தலைமுறை உருவாகிவிட்டது.

மேலும் உலகம் முழுவதும் இடம்பெயர்கிறவர்கள் மீள் திரும்புவது இல்லை. தமிழ்நாட்டை ஆண்ட திராவிடக் கட்சிகள் இலவசத் திட்டங்கள் அனைத்தையும் முகாம்களுக்கும் வழங்கியிருக்கிறார்கள். அதனைப் பெரிய வரப்பிரசாதமாகப் பார்க்கிறார்கள். குறிப்பாக இவர்களிடம் இந்தியக் குடியுரிமை வேண்டும் என்கிற குரலும் ஒலிக்க ஆரம்பித்துவிட்டது. வட்டார ரீதியாக, பண்பாட்டு ரீதியாக அந்தந்த மொழியைப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். கொங்கு வட்டார முகாம்வாசிகள் கொங்குத் தமிழைப் பேச ஆரம்பித்துவிட்டார்கள். இன்னும் சொல்லப்போனால் முகாமின் சுற்றுவட்டார ஆதிக்கச் சாதிகளைப் பார்த்துத் தங்களையும் அந்தச் சாதியாக அடையாளப்படுத்தும் மனோபாவமும் வந்துவிட்டது. ஒளிவு மறைவின்றிச் சொல்வதானால் முகாமிற்குள் சாதிப் பிரச்சினை வந்துவிட்டது. மதுரைக்கு அருகிலிருக்கும் முகாமிற்குள் முத்துராமலிங்கத்தேவர், புலி படம் போட்ட ப்ளக்ஸை விசேஷங்களுக்கு வைக்கத்தொடங்கிவிட்டார்கள்.

தங்களை உயர்ந்த சாதியாகச் சொல்லிக்கொள்ளும் மனநிலை தலைதூக்க ஆரம்பித்திருக்கிறது. ஆக அகதி மக்களுக்கும் வேறு வழி இல்லை. இந்திய அரசுக்கும் வேறு வழியில்லை. கட்டாயமாகக் குடியுரிமையை வழங்கித்தான் ஆக வேண்டும். இதனையே நானும் வலியுறுத்த விரும்புகிறேன்.

**தனித் தமிழீழம் அமைப்பதை உயிர்மூச்சாகக் கொண்டு உருவானது விடுதலைப் புலிகள் இயக்கம். வரலாற்றில் இன்று துடைத்தெறியப்பட்டிருக்கிறது. சிறுவயதில் விடுதலைப்புலிகள்மீது நீங்கள் கொண்டிருந்த அபிப்ராயம் என்ன?**

தொடக்கத்தில் ஆக்கப்பூர்வமான, உணர்வுப்பூர்வமான விடுதலைப்புலி இயக்க ஆதரவாளன் நான். அந்தச் சூழல், அவர்கள் கற்பித்த அரசியல் என்னை ஈர்த்தது. ஒருவேளை ஊரிலேயே இருந்திருந்தால் இயக்கத்தில் சேர்ந்து இறந்தும் போயிருக்கலாம். எனது மூத்த அண்ணன் இயக்கத்திலிருந்து இறந்துபோய்விட்டார். அதனால் எனக்கு ஒரு தொடர்ச்சி உண்டு.

ஆரம்பத்திலிருந்த நிலைப்பாடு காலப்போக்கில் மெல்ல மாறத் தொடங்கியது. அகதி முகாம் வழங்கிய வாழ்க்கை அனுபவம், வெளிப்பயணம், உலகம் பற்றிய பார்வை, அரசியல் தெளிவு, தீவிர வாசிப்பு, நவீன இலக்கியங்கள் தந்த மாற்றுப் பார்வை, பின்னை நவீனத்துவ உரையாடல் தந்த புதிய வெளிச்சம் ஆகியவற்றினூடாகப் புதிய பார்வையைக் கண்டடைந்தேன். போருக்கு எதிரான மனநிலைக்கு வந்து சேர்ந்தேன்.

இன்று போர் என்பது வன்முறை என்று முழுமையாக நம்புகிறேன். உலகம் முழுவதும் விமர்சனத்துடன் ஏற்றுக்கொள்ளப்பட்டதுதான் ஜனநாயகம். ஜனநாயகத்தில் அவ்வளவு கோளாறுகள் இருந்தாலும் பேசுவதற்கு அவ்வளவு வெளியும் இருக்கிறது. முரணை நாம் பேசித்தானே கடக்க வேண்டும். ஜனநாயகத்திற்குள்ளும் போதாமை இருக்கிறதென்றால் அதனைப் பேசுவதற்கும் ஜனநாயகத்தில் இடமும் இருக்கிறது. இன்றுள்ள அரசியலை வைத்துப் பேசவில்லை.

…ராக ஜனநாயகத்தின் உண்மைத் தன்மை குறித்துப் பேசுகிறேன். இன்று அதிகாரம் உள்ளவர்களிடையேதான் ஜனநாயகம் இருக்கிறது என்று சொல்லப்பட்டாலும் உலகம் முழுவதும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சிறந்த வடிவம் ஜனநாயகம்.

எனக்கு உரிமை தரவில்லை என்று நான் குரல் எழுப்புவது கூட ஜனநாயகம்தான். போர் செய்வதற்கு ஆயிரத்தெட்டுக் காரணங்களை அடுக்கினாலும் மனிதன் இன்னொரு மனிதனைக் கொல்வதை நான் விரும்பவில்லை. மனிதக் கொலைக்கு எதிரானவன். போருக்கு எதிரானவன். அந்தவகையில் விடுதலைப் புலிகள் கையில் எடுத்திருந்த ஆயுதத்தை வன்முறையாகத்தான் பார்க்கிறேன். இலங்கைத் தமிழராய், பாதிக்கப்பட்டவன் என்கிற முறையில் இவ்வாறு ஒப்புதல் வாக்குமூலம் கொடுப்பதில் சிறிதும் தயக்கமில்லை. துப்பாக்கி அதிகாரத்தின் உச்சம். அந்த அதிகாரம்தான் அகதிகளை உருவாக்கிக்கொண்டே இருக்கிறது.

**உங்களது பதில் நிதானமாக இருக்கிறது. நீங்கள் சுய பரிசோதனை செய்துகொண்டதன் நிலைப்பாடு. ஆனால் சூழலைப் புரிந்துகொள்ள வேண்டும் என்று நினைக்கிறேன். சிங்கள–பௌத்தப் பேரினவாதம் தமிழ் மக்கள் மீதும், கலாச்சாரத்தின் மீதும் தொடர்ந்து அகமும் புறமும் தாக்குதலைத் தொடுத்தபோது தன்னெழுச்சியாகப் பல இயக்கங்கள் உருவாகின. இதில் வரலாற்றில் நின்றது விடுதலைப் புலிகள் இயக்கம். ஆயுதவழியில் போராட்டத்தைக் கட்டமைத்துத் தொடர்ச்சியாகக் கால் நூற்றாண்டாகப் போராடியது. விடுதலைப் புலிகள் அக்காலச் சூழலுக்கு ஏற்ப ஆயுதத்தைக் கையில் எடுத்ததை எதனடிப்படையில் தவறென்று கூறமுடியும்? ஐம்பதாண்டுகளுக்கு முன்பு நாம் குறை சொல்லும் இடத்தில் காலமும் சூழலும் இல்லை அல்லவா? மேலும் ஜனநாயகத்தின் கொம்பென்று பேசுகின்ற இந்தியாவிலேகூட விடுதலைப் போராட்டத்தின் வடிவங்களில் ஆயுதப் போராட்டமும் உண்டுதானே? இன்று தனிநாடுகளாக பல உருவானது ஆயுதத்தின் வழியிலேதானே. சேகுவேராவின் கையில் இருந்ததும் ஆயுதம் அல்லவா? இந்தக் கேள்வி பத்திநாதனின் மனநிலையை அறிந்துகொள்ளவே!**

விடுதலைப் புலிகளை மட்டும் அல்ல; ஆயுதங்களைக் கையில் வைத்திருக்கும் எந்தக் குழுவையும் நான் ஆதரிப்பது இல்லை. இன்னும் தெளிவாகச் சொன்னால் நாட்டின் இராணுவக் கட்டமைப்பையே தவறு என்றுதான் சொல்வேன். ஆயுத உற்பத்தியையே தவறு என்றுதான் சொல்வேன்.

அடிப்படையில் மனிதர்களுக்குள் முரண்பாடுகள் இருக்கும். அதிகாரம், அதிகாரமின்மை இருக்கும். இதனைச் சரி செய்ய நாம் செய்ய வேண்டியது உரையாடலைக் கட்டமைப்பதன்வழிதான். விடுதலைப் புலிகளிடமிருந்த நியாயமான கோரிக்கைகளைக்கூட உரையாடல் வழியாகத் தீர்த்திருக்க முடியும் என்று நம்புகிறேன். இதற்குப் பதிலாக வன்முறையைக் கையில் எடுப்பது தீர்வு இல்லை. இன்றிருக்கும் சூழ்நிலையில் விடுதலைப் புலிகள் இயக்கம் ஆயுதக் குழு என்பதால் அதனை முற்றிலுமாக நிராகரிக்கிறேன். ஏனென்றால் விடுதலைப் புலிகள் இராணுவக் கட்டமைப்போடு உருவாக்கப்பட்ட இயக்கம். இதற்குள் ஜனநாயகத் தன்மை இருக்காது. ஆயுதம் ஜனநாயகத்தைப் பேச அனுமதிக்காது. ஜனநாயகம் எங்கு நீர்த்துப்போகிறதோ அங்குதான் ஆயுதம் மேலெழுந்து வரும்.

**உங்கள் பார்வையில் பிரபாகரனும் அவரது இயக்கமும்…**

பிரபாகரன் நல்லவர். அதே நேரத்தில் புனிதமானவரோ தூய்மையானவரோ அல்லர். அவர் கட்டமைக்க முற்பட்டது ஏற்கெனவே இருந்த மேலாதிக்கச் சமூகத்தினுடைய (வெள்ளாளர்) கருத்தியலைத்தான். இந்தக் கருத்தியல் தொடக்கத்தில் அஹிம்சையாக இருந்தது. இவரது கைக்கு வந்ததற்குப் பிறகு ஆயுதப் போராட்டமாகவும் வன்முறைப் போராட்டமாகவும் மாறுகிறது.

**உங்கள் பதிலிலிருந்து இன்னும் தெளிவாகிக்கொள்ள விரும்புகிறேன். அங்கு நிலவிய வலதுசாரிய, சனாதன மரபின் வேறொரு முகம்தான் பிரபாகரன். அதாவது வெள்ளாள அரசியலின் மாற்று வடிவம்; என்றால், பிரபாகரன் சாதியவாதியா; பழைமைவாதியா? அவர் சாதியை ஒருநாளும் ஏற்றுக்கொண்டதில்லை என்றுதானே சொல்லப்படுகிறது அல்லது நம்பப்படுகிறது.**

தொடர்ந்து பிரபாகரன் குறித்த உரையாடல் தமிழ்ச்சூழலில் உணர்ச்சிபூர்வமாக அணுகப்படுவதோடு அவரை நாயகனாகத்தான் கட்டமைக்கிறார்கள். இந்தக் கட்டமைப்பு, அரசியல் நடத்தத் தேவையாயிருக்கிறது.

ஹீரோவாக மட்டுமே பிரபாகரனைப் பார்த்துவிட முடியாது. அடுத்து, பிரபாகரன் சாதியவாதியா என்று கேட்கிறீர்கள். அதற்கு என்னுடைய பதில், அங்கு நிலவிய ஆதிக்கச் சமூகத்தின் கருத்தியல் தொடர்ச்சி பிரபாகரன் என்று சொல்வேன். அதுபோலவே பிரபாகரனை ஜனநாயகவாதி என்றும் சொல்லமாட்டேன். எந்த இடத்தில் ஜனநாயகம் தோற்றுப்போகிறதோ அல்லது செயலிழந்துபோகிறதோ அந்த இடத்தில்தான் ஆயுதமோ வன்முறையோ வெளியில் வருகிறது. அந்தவகையில் பிரபாகரன் ஓர் ஆயுதக் குழுவின் தலைவர்.

பிரபாகரன் கையிலிருந்த ஆயுதம் அங்கிருந்த நடைமுறை சாதிப் பழக்கவழக்கங்களைத் தற்காலிகமாக மட்டுப் படுத்தியிருந்ததேயொழிய சாதியை அழித்துவிடவில்லை. பிரபாகரனை நேரடியான சாதியவாதி என்று சொல்லவில்லை. ஆனால் அதனுடைய கருத்தியல் தொடர்ச்சி அவர் என்பேன்.

பிரபாகரன் கொண்டிருந்த தமிழ்த்தேசக் கருத்தியல் யாருடையது, தமிழ் அடையாளம் என்று அவர் சொல்கிற சிந்தனை யாருடையது, தலைவராக யாரை ஏற்றுக்கொண்டார் என்று ஆராயும்போது அவர் வெள்ளாளச் சமூகத்திலிருந்து உருவான தலைவர்களின் தத்துவ அடையாளங்களைத் தூக்கிச் சுமந்தார் என்று சொல்வதில் எனக்குத் தயக்கங்கள் இல்லை.

**போராளிகள் இயக்கத்தில் வெவ்வேறு பின்புலங்களிலிருந்து இணைந்துள்ளனர். இயக்கத்திலுள் சாதிய முரண் சார்ந்த விஷயங்கள் நடந்ததாகப் புலிகள் மீது குற்றம் சுமத்த முடியாது அல்லவா? நீங்கள் பதினாறு வயதில் தமிழகம் வந்துவிட்டீர்கள். தமிழகத்தில் வாழும் ஒருவருக்குப் புலிகளைப் பற்றி என்ன தெரியுமோ அந்த அளவிற்குத்தான் உங்களுக்கும் தெரியும் இல்லையா? அதனால்தான் கேட்கிறேன், ஆதாரம் ஏதும்**

**இல்லாமல் சாதியம் சார்ந்த கேள்விக்கு நீங்கள் தரும் பதில் எந்தளவிற்குச் சரியென்று சொல்ல முடியும்?**

சாதியம் தொடர்பாக எழுப்பும் கேள்விக்கு நீங்கள் ஆதாரம் கேட்பது சரிதான். நாம் ஒரு சாதியச் சமூகத்தால் பிணைக்கப்பட்டிருக்கிறோம்; சாதியக் குழுவாகப் பிணைந்திருக்கிறோம். இதில் எனக்கு மாற்றுக் கருத்து இல்லை. உங்களுக்கும் இருக்காது என்றே நம்புகிறேன். தமிழ்ச் சமூகத்தில் சாதியம் ஊடுருவாத இடமே இல்லை. இவ்வாறு இருக்கையில் இயக்கத்தைப் பொறுத்தவரை பிரபாகரன் கையிலிருந்த ஆயுதம்தான் சாதியை வெளியில் சொல்லாமல் பாதுகாத்ததேயொழிய உள்கூடிப் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்குள்ளேயே சாதி வேற்றுமைகள் நிலவியதற்கான சான்றுகளைச் சொல்ல முடியும். வெளிப்படையாகவே பேசியும் இருக்கிறார்கள். அதற்கான உரையாடல் நடந்திருக்கிறது. இன்னும் ஒரு குற்றச்சாட்டை வைக்கிறேன். நீங்கள் வேண்டுமானால் ஆராயுங்கள். அதாவது தற்கொலைப் போராளிகளாக இருந்தவர்கள் யாரென்று பாருங்கள். அதிலும் பெரும்பான்மை யாரென்று பார்த்தீர்களென்றால் அனைவரும் விளிம்புநிலையில் இருக்கக் கூடியவர்கள்.

**ஏன் உங்கள் குற்றச்சாட்டை மறுக்கிறேனென்றால் கடைசி வரைக்கும் பிரபாகரன் தமிழகத்தின் ஒவ்வோர் அசைவையும் கவனித்தார் என்று சொல்லப்படுகிறது. தமிழ்த் திரைப்படத்தை விரும்பிப் பார்த்திருக்கிறார். வடிவேலுவின் தீவிர ரசிகர் என்று நானே ஒரு பத்திரிகையில் படித்திருக்கிறேன். தமிழகத்தில் சாதியக் கலவரங்கள் நடக்கும்போதெல்லாம் வன்மையாகக் கண்டித்திருக்கிறார் என்றெல்லாம் சொல்லப்படுகிறது. மேலும் ஒடுக்கப்பட்டோரின் அரசியல் முகமாகப் பார்க்கப்படுகிற திருமாவளவன் அவரைச் சந்தித்திருக்கிறார். இருவருக்குமிடையே உரையாடல் நடந்திருக்கிறது. பிரபாகரன் வெள்ளாளச் சாதியத்தின் முகமென்றால் திருமாவளவன் போன்றோரைச் சந்திக்க விரும்பியது ஏன்?**

திருமாவளவன் பொதுத் தலைவர். அறிவுத்தளத்தில், அரசியல் தளத்தில் அவருக்கென்று ஓர் இடம் இருக்கிறது. இங்கிருக்கும் சாதியவாதிகள்தான் அவரைத் திரும்பத் திரும்பச் சாதியவாதியாகக் கட்டமைக்கிறார்கள்.

அந்தவகையில் இருவரும் சந்தித்துக்கொண்டதில் வியப்பேதும் இல்லை. அதாவது விடுதலைச் சிறுத்தைகள் கட்சி உருவாகிவந்தபோது பிரபாகரனின் தாக்கம் இருந்ததை மறுக்க முடியாது. கட்சிப் பெயர்கூட அவரது தாக்கம் என்று சொல்லப்படுவதுண்டு. ஆனால் அந்தக் காரணத்தை மட்டும் வைத்துப் பொதுமைப்படுத்திவிட முடியாது. அதே நோத்தில் ஆழமாகப் பார்த்தால் இன்றுவரைக்கும் பிரபாகரன் உயிரோடிருக்கிறார் என்று சொல்லுகிற பழ. நெடுமாறன் யார் என்ற கேள்வியையும் கேட்டுப் பாருங்கள்.

பிரபாகரன் தொடர்ந்து திருமாவளவனோடு இருந்தாரா இல்லை பழ. நெடுமாறன் போன்றோரிடம் இருந்தாரா என்பவற்றிலிருந்தும் புரிந்துகொள்ளலாம். கோயமுத்தூர் கு. ராமகிருஷ்ணன், வைகோ போன்றோர் எப்படியான கட்டுமானத்தைச் சேர்ந்தவர்கள்? இடைநிலைச் சமூகத்தைச் சார்ந்தவர்கள். புலிகளின்

> பிரபாகரன் கையிலிருந்த ஆயுதம்தான் சாதியை வெளியில் சொல்லாமல் பாதுகாத்ததேயொழிய உள்கூடிப் பார்த்தால் விடுதலைப் புலிகளுக்குள்ளேயே சாதி வேற்றுமைகள் நிலவியதற்கான சான்றுகளைச் சொல்ல முடியும்.

பயணமும் இடைநிலைச் சமூகத்திற்குள்தான் இருந்தது. விடுதலைப் புலிகள் தமிழகத்தில் பயிற்சி எடுக்கும் காலத்தில் இங்கிருக்கும் உயர்சாதிக் குழுக்களோடே தொடர்பில் இருந்தார்கள் என்றும் சொல்ல வருகிறேன்.

**தமிழகத்தில் நிலவுகிற தமிழ்த் தேச அரசியலைப் பற்றி உங்களது அவதானிப்பு என்ன? தொடக்கத்தில் பழ. நெடுமாறன், திருமாவளவன் போன்றோர் கையிலெடுத்தார்கள். திராவிட அரசியலுக்குள் இருந்தாலும் பிரபாகரனின் தீவிரப் பற்றாளராக வைகோ இருந்திருக்கிறார். இவர்களையெல்லாம் கடந்து சீமான், பிரபாகரனைத் தலைவனாக முன்மொழிந்து தமிழ்த் தேச அரசியலைக் கட்டமைத்து அரசியல் களத்தில் நிற்கிறார். நீங்கள் கடந்த முப்பது ஆண்டுகளாக தமிழகத்தில் வாழ்ந்திருக்கிறீர்கள் இல்லையா?**

தொடக்கத்தில் நானும் தமிழ்த்தேச அரசியலின்பால் ஈர்க்கப்பட்டவன்தான். நான் முகாமிலிருந்த காலத்தில் அங்கிருக்கும் கட்டுப்பாடுகளை மீறி வைகோ தேர்தலில் நின்றபோது பிரச்சாரம் செய்திருக்கிறேன். இது என்னுடைய நேரடி அனுபவம்.

சமகாலத்தைத் தெளிவாக நோக்கினால் தமிழ்த் தேச அரசியல் உணர்ச்சிப்பூர்வமானது. அவ்வளவுதான். இலங்கையில் நடந்த அரசியலை இங்கு கொஞ்சமாகக் கூடப் பேசவே இல்லை. பேசப்பட்டது எல்லாமே சுயலாபம், பெருமை. இவை தலைவர்கள் உருவாகப் பயன்பட்டதேயொழிய இலங்கைத் தமிழர்களுக்கு இவர்களால் எந்தவிதப் பயனும் மாற்றமும் ஏற்படவில்லை என்பதுதானே உண்மை. விடுதலைப் புலிகளை ஒரு ப்ராண்டாக வைத்து அரசியல் செய்தார்கள் அவ்வளவுதான்.

தமிழகம் ஒரு மாநிலம். இதற்குக் குறைவான அதிகாரமே உள்ளது. சில காலகட்டத்தில் இலங்கை தொடர்பாகப் பேச முடியாத சூழல்கூட இங்கு நிலவியதையும் மறுக்க முடியாது. ஆனாலும் என்னுடைய முப்பது ஆண்டுகால அனுபவத்தில் சொல்கிறேன். தமிழ்நாட்டில் இலங்கை தொடர்பாக ஆக்கப்பூர்வமான

உரையாடல் நடைபெறவே இல்லை.

சீமானின் அரசியலைக் கூர்மையாகக் கவனித்து வருகிறேன். அதிகமான இளைஞர்கள் அவரது பேச்சால் ஈர்க்கப்பட்டு அவர் பின்னால் திரளுகிறார்கள். வியக்கவில்லை. அவர் வருகையைச் சாத்தியமாக்கியது திராவிட அரசியல் செயல்பாடே. ஐம்பது ஆண்டுகளாக ஆட்சியிலிருந்த கழக அரசியலின் போதாமையினால் விளைந்த ஒன்று. நீண்ட காலம் நிலவிய அரசியல் ஒரு முடிவுக்கு வரும்போது இன்னொரு அரசியலைப் பொதுமக்கள் குறிப்பாக, இளைஞர்கள் விரும்புகிறார்கள்.

சீமான் தூய்மைவாத அரசியலைப் பேசுகிறார். என்னைப் பொறுத்தவரை ஜனநாயக அரசியலில் நிலவும் பன்மைத் தன்மைக்குள் தூய்மைவாத அரசியலை ஏற்றுக்கொள்ள முடியாது. சொல்லப் போனால் இவர்களது இனத்தூய்மைவாதம் எனக்கு அச்சத்தை ஏற்படுத்துகிறது. அப்படியென்றால் நானும்கூட வந்தேறியா, இங்கு வாழும் அகதிகளும் வந்தேறிகளா என்கிற கேள்விகள் எழுகின்றன.

சீமானின் அரசியலை யோசிக்கும்போது அவரது இயக்கத்தின் வளர்ச்சி அவர்களுக்கானது. அவர்கள் முன்னெடுக்கக் கூடிய விடுதலைப் புலிகள், பிரபாகரன், தனி ஈழம் இவைகளெல்லாம் இவர்களுக்கு அரசியல் செய்யப் பயன்படுமே அல்லாது இலங்கை மக்களுக்கு எந்தவகையிலும் பயனளிக்காது. ஒருவேளை எதிர்காலத்தில் அதிகாரம் இவர்களுக்கு வந்துவிட்டால் அன்றைய சூழ்நிலைக்குத் தகுந்தாற்போல அரசியலை முன்னெடுப்பார்களே தவிர இனத்தூய்மையைப் பேசிக்கொண்டிருக்க மாட்டார்கள்.

**விடுதலைப் புலிகள் மீதான குற்றச்சாட்டுகளில் ஒன்று இலங்கையிலிருந்து பொதுமக்கள் மேற்குலகு நாடுகளுக்கோ தமிழகத்திற்கோ இடம்பெயர்ந்தபோது தடுக்கவும் இல்லை; அதேவேளையில் தாயகம் திரும்பிய மக்களை அவர்கள் வரவேற்கும் மனநிலையிலும் இல்லை, குறிப்பாக, தமிழகத்து அகதிகளை என்று சொல்லப்படுகிறது; இந்த மாறுபாடான அரசியலுக்குக் காரணம் என்ன?**

விடுதலைப் புலிகளுக்கும் இந்தியாவிற்குமான உறவு, இலங்கை அரசிற்கும் இந்தியாவிற்குமான உறவு, அன்றைய காலகட்டத்தில் முக்கியமானது. கலவரம் தொடங்கிய 83இல் பொதுமக்கள் இடம்பெயர ஆரம்பிக்கிறார்கள். பிறகு 90களில் லட்சக்கணக்கில் அகதிகளாக வருகிறார்கள். பொதுவாகச் சொன்னால் போர் நடக்கும்போது திட்டமிட்டு மக்களைக் கொல்லவும் செய்வார்கள். அதே வேளையில் தடுத்துப் பொதுமக்களைக் காப்பாற்றவும் செய்வார்கள். ஆனால் மாறுபாடாகச் சொன்னால் பொதுமக்களைக் கொல்வதன் வழியாகவும் வதைப்பதன் வழியாகவும் அரசியல் உரையாடல் நிகழும் அதேவேளையில் அகதிகள் வெளியேற்றத்தின் வழியாக இன்னொரு நாட்டின்மீது உரையாடலை நிகழ்த்த முடியும்.

இலங்கையிலிருந்து இந்தியாவிற்குப் பொதுமக்கள் அகதிகளாக வருகிறார்களென்றால் உங்களுடைய குடிமகன் என்னுடைய நாட்டிற்கு வந்திருக்கிறார் என்பதை வைத்து அரசியல் உரையாடல் நடத்த முடியும். இது அன்றைய சூழலில் தேவையாயிருந்தது.

அதாவது புலிகளுக்கும் ஓர் அரசியல் தேவையிருந்தது. அதனால் பொதுமக்கள் அகதிகளாவதைத் தடுக்கவில்லை. கூடுதலாகச் சொன்னால் அகதிகளாக வந்த சில குழுக்களை ஏற்றி அனுப்பிவைத்தார்கள் என்று சொல்லப்படுவதுண்டு. அதாவது கடத்தலுக்கோ, மற்ற அரசியல் இரகசியத் தொடர்புகளுக்கோ அகதிகளைப் பயன்படுத்திக்கொண்டார்கள். இந்தியாவைப் பொறுத்தவரை இலங்கை மக்கள் அகதிகளாக இருப்பதைக் கொண்டு இலங்கையோடு பேசுவதற்கான வாய்ப்பு ஏற்பட்டது.

போரில் பொதுமக்கள் சாவதும் அரசியல் உரையாடல்தான். பொதுமக்கள் அகதிகளாக மாறுவதும் அரசியல் உரையாடல்தான். ஐரோப்பிய நாடுகளுக்கு இடம்பெயர்ந்தவர்களிடமிருந்துதான் போரை நடத்துவதற்கான 'பணம்' வந்தது. அதனால் புலிகள் தேவைக்காகப் பயன்படுத்திக்கொண்டார்கள். போர் மனிதர்களை மட்டும் கொல்லக் கூடியது அல்ல; அதற்குப் பின்னால் பணம், பொருள், அரசியல் என்று அனைத்தும் இருக்கிறது அல்லவா? ஒரு அரசை நிர்ப்பந்திக்கவும் பயன்படுகிறது. இன்னொரு அரசின்மீது அகதிகளை வைத்துத் தலையீடு செய்யவும் முடிகிறது. அகதிகள் வெளியேறாமைக்குப் புலிகளுக்கு ஒரு காரணம் இருந்ததுபோலவே இந்திய அரசுக்கு அகதிகளை வரவேற்பதற்கும் ஒரு காரணம் இருந்தது. இலங்கை அரசு அகதிகளாக மக்கள் வெளியேறுவதை விரும்பவில்லை. அதற்கும் ஒரு காரணம் இருந்தது. இவ்வாறாக தேவைகளுக்கு இடையில் மாட்டிக்கொண்டது பொதுமக்கள்தான். இன்று எல்லாமே தீர்த்துப்போய்விட்டது.

**மேற்குலக நாடுகளோடு தொடர்ந்து புலிகள் தொடர்பில் இருந்துள்ளார்கள். ஆனால் தமிழகத்திற்கு இடம்பெயர்ந்து வந்த மக்களோடு தொடர்பை வைத்துக்கொள்ளவில்லையே ஏன்?**

1983இலிருந்து அகதியாக இடம்பெயர்வது தொடர்கிறது. இதில் ஐரோப்பாவிற்கு இடம்பெயர்ந்தவர்கள் என்று பார்த்தால் சமூக அடுக்கில் உயர்ந்தவர்கள், படித்தவர்கள். இவர்களே போரை நடத்துவதற்கான நிதியைத் திரட்டியவர்கள். அதனால் புலிகள் மேற்குலகிற்கு இடம்பெயர்ந்தவர்களோடு தொடர்ச்சியாகத் தொடர்பில் இருந்தார்கள். மற்றொன்று யாழ்ப்பாணத்தில்தான் அரசியல் ரீதியான போராட்டம் தொடங்கியது. பிரபாகரன் யாழ்ப்பாணம். ஆயுதப் போராட்டமும் யாழ்ப்பாணத்திலிருந்துதான் தொடங்கியது. பிறகு மெல்ல நகர்ந்து வன்னிப் பகுதிக்கு வருகிறது. ஏன் வன்னிக்கு இடம் பெயர்ந்தார்களென்றால் போருக்கான நிலப்பரப்பாக யாழ்ப்பாணம் இல்லை. மூன்று பக்கமும் கடல் சூழ்ந்த நிலப்பரப்பாக இருக்கிறது. மேலும் போர் செய்வதற்குப் பணத் தேவையைவிட மனித வளம் தேவை. மனித வளமும் பாதுகாப்பான நிலவியலாகவும் 'வன்னி' இருந்தது.

தமிழ்நாட்டிற்கு வந்த அகதிகள் குறித்துப் பேசாததற்கான காரணத்தை மாவீரர் உரையிலிருந்தே புரிந்துகொள்ளலாம். உரையில், இந்திய அரசை நோக்கிப் பல்வேறு கோரிக்கைகளை வைக்கும்போது அகதிகள் குறித்துப் பேசவே இல்லை. இது தொடர்பா

என்னுடைய நண்பர்களிடம் பேசும்போது "ராஜீவ் காந்தி மரணத்திற்குப் பிறகு விடுதலைப் புலிகள் இந்தியாவில் தடை செய்யப்பட்டார்கள். புலிகளுக்கு மட்டும் அல்லாமல் அகதிகளுக்கே நெருக்கடி உருவாகியது. அதனால் நேரடியான தொடர்புகள் அறுபடத் தொடங்கின. இச்சூழலில் அகதிகள் தொடர்பாகப் புலிகள் பேசும்போது அகதிகளுக்கு ஏதேனும் பிரச்சினை ஏற்பட்டுவிடும் என்று பேசாமல் தவிர்த்தார்கள்" என்று கூறினார்.

மற்றொரு புறம் இங்கிருக்கும் அகதிகளால் புலிகளுக்கு ஒரு லாபமும் இல்லை. இங்கிருந்து திரும்பிச்சென்ற மக்களைக்கூட ஐயத்தோடு பார்த்தார்கள் என்று சொல்லப்படுவது உண்டு. தமிழகத்தில் வாழ்ந்த அகதிகள் 'எய்ட்ஸ்' நோயால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்ற தகவலின் அடிப்படையில் புலிகளின் மருத்துவக்குழு இங்கிருந்து சென்ற மக்களைப் பரிசோதனை செய்தது என்ற குற்றச்சாட்டும் உண்டு. தமிழகம் வந்த அகதிகள் அனைவரும் எய்ட்ஸ் நோயாளிகளா என்ற கேள்வியைக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆனால் அதே காலகட்டத்தில் தொண்டு நிறுவனங்கள் எய்ட்ஸ் நோய் குறித்த விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை முன்னெடுத்தன.




இவர்கள் வழியாக இந்திய உளவுத்துறை வந்துவிடுமோ என்று அச்சப்பட்ட புலிகள் பரிசோதனை செய்தார்கள் என்றும் சொல்லப்படுவதுண்டு. மொத்தத்தில் எழுத்தாளர்கள், அரசியல் தலைவர்கள், மேற்குலகவாசிகள், புலிகள் என எந்தத் தரப்பும் தமிழக அகதிகள் குறித்துப் பேசவில்லை.

**மேற்குலகிற்குப் புலம்பெயர்ந்த அகதிகள் பெரும்பாலும் உயர்சாதி வெள்ளாளர்கள். இவர்கள் திரட்டிக் கொடுத்த பணம் புலிகளுக்குப் பயன்படுகிறதென்றால் அவர்களது கருத்தை / அரசியலை முன்னெடுக்கும் வேலையைச் செய்தார்கள் என்று சொல்லலாமா?**

அஹிம்சைப் போராட்டமாகட்டும், ஆயுத வழியிலான போராட்டமாகட்டும் எல்லாம் வெள்ளாளர்களிடமிருந்துதான் தொடங்கியது. காந்தியைப் பேசியதும், ஆயுதம் எடுப்பதற்கு ஆலோசனை வழங்கியதும் அவர்கள்தான்.

இலங்கை அரசியல் வரலாற்றில் பின்னோக்கிப் போனால் ஆறுமுக நாவலரிலிருந்து தொடங்கலாம். சாதியத் தூய்மைவாதம், சமயத் தூய்மைவாதம் இரண்டும் இவரிடமிருந்தே தொடங்கியது. அதே காலகட்டத்தில் சிங்களப் பகுதியில் 'அனகாரிக தர்மபாலர்' பௌத்த எழுச்சி, சிங்களர் எழுச்சி எனப் பேசிக்கொண்டிருந்தார். இவர்கள் இரண்டுபேருமே ஆங்கிலக் கல்வி, கிறிஸ்துவ மிஷனரிமார்களின் வரவு ஆகியவற்றை எதிர்த்தார்கள். தங்களுடைய அடையாளங்கள் சிதைவதாக நம்பினார்கள். இங்கிருந்தே இனத் தூய்மைவாதம், தமிழ்த் தேசியம், மொழி அரசியல் கூடிய 'சைவமும் தமிழும்' என்கிற கருத்து உற்பத்தியாகிறது.

**உங்கள் பதிலிலிருந்தே மற்றொரு கேள்வி; தனித் தமிழ் ஈழம் அமைந்திருந்தால் அங்கு உருவாகியிருக்கும் தேசியத்திற்குள் எந்தக் கருத்தியல் மேலோங்கியிருக்கும்? எதற்காக இந்த வினாவை எழுப்புகிறேனென்றால் புலிகள் பெண்விடுதலையையும் சாதிய மறுப்பையும் விரும்பியவர்கள். அதாவது நவீன சமூகத்திற்குரிய முற்போக்குவாதிகளாக அறியப்பட்டிருக்கிறார்கள். இவ்வாறிருக்கையில் நீங்கள் சொல்வதிலிருந்து தனி ஈழம் அமைந்திருந்தால் வெள்ளாளர்களே ஆதிக்கம் செலுத்தியிருப்பார்கள் என்கிறீர்களா?**

கண்டிப்பாக. பிரபாகரனை முன்வைத்தும், பிரபாகரன் இல்லாமலும் பேசவேண்டியிருக்கிறது. பிரபாகரனின் காலகட்டம் மிகமுக்கியமானது. பலம், பலவீனங்கள் ஆகியவற்றுக்குள் நின்று உரையாடவும் இடமிருக்கிறது. சில சமதர்ம உரையாடல்களும் நடந்திருக்கின்றன. எல்லாமே புனிதமானவை என்று சொல்வதற்கில்லை.

பெண் விடுதலை என்று சொல்வதற்கு நிகராக மாற்று உரையாடலும் அங்கு உண்டு. ஒப்பீட்டளவில் சில முன்னுதாரணங்கள் உண்டென்பதையும் மறுப்பதற்கில்லை. பெண் விடுதலை என்பதற்குப் பின்னால் நிறைய உரையாட வேண்டியும் இருக்கிறது. பிரபாகரன் காலகட்டம், பிரபாகரனுக்கு முன்பிருந்த காலகட்டம், பிரபாகரன் இல்லாத காலகட்டம் என மூன்றாகப் பிரித்துப் பார்க்க வேண்டியிருக்கிறது.

**உலகம் முழுவதும் வாழும் தமிழர்கள் தனித்தமிழ் ஈழம் சிதைந்ததைப் பெரும் கவலையோடு பார்க்கிறார்கள். இதில் அதிகப் பங்கு வகித்த வெள்ளாளர்கள் எவ்வாறு பார்க்கிறார்கள்?**

தமிழ்நாடு, ஈழப்பிரச்சினையைப் பிரபாகரனின் ஹீரோயிச மனநிலையோடே அணுகியது. வைகோவோ பழ. நெடுமாறனோ ஈழப்பிரச்சினையை முறையாக இங்குக் கொண்டுவந்து சேர்க்கவில்லை. உணர்ச்சி நிலையிலேயே அணுகியிருக்கிறார்கள்.

விடுதலைப் புலிகளின் தோல்விகளுக்குப் பிறகு வெளிநாட்டுச் சொத்துக்கள் வெள்ளாளர்களிடம் சேர்ந்துள்ளன. அவர்களால் தோல்வியை ஜீரணிக்கவும் முடியவில்லை. போர் நடக்கும்போது தீவிரமாகச் செயல்பட்டவர்களும் அவர்கள்தான்; சொத்துக்களை அனுபவித்துவரும் இவர்கள் தற்போது பிரபாகரன் உயிரோடிருக்கிறார் என்ற செய்தியைப் பரப்பவும் செய்கிறார்கள்.

**முப்பதாண்டுகளுக்குப் பிறகு சொந்த நாட்டில் வாழப்போகிறீர்கள் என்றாலும் உங்கள் வாழ்வியலை**

**அமைந்தது தமிழக நிலம்தான். அதாவது இங்கு நிலவும் வட்டாரப் பழக்கவழக்கங்கள், சாதி சார்ந்த ஏற்றத்தாழ்வுகள், வட்டார அரசியல், மொழி சார்ந்த அரசியல், திராவிட இயக்க அரசியல், கலை – இலக்கியச் செயல்பாடுகள் என அனைத்தையும் எடுத்துக்கொள்ளலாம். இந்தப் பின்புலத்தோடு அங்கு செல்லும் நீங்கள் அங்கு நிலவும் வாழ்வியலுக்குள் எவ்வாறு இணைவீர்கள்?**

நாற்பதைந்து வயதைக் கடந்துவிட்ட நான், ஜனநாயகம் வழங்கியுள்ள உரிமைகளை அனுபவிக்கவே இல்லை. இச்சூழலில் தாயகப் பயணம் சொர்க்கமானதுதான். அங்கு சென்றவுடன் அகதியில்லை என்றாலும் 'முன்னாள் அகதி' என்ற சட்டையை உடுத்த வேண்டியிருக்கும். இந்த இடப்பெயர்ச்சி சராசரி வாழ்வியலுக்குள் கொண்டுசேர்க்கும் என்ற நம்பிக்கை எனக்கு இல்லை. மலையக மக்கள், பர்மா காலனி என்று இன்று அழைக்கப்படுவதுபோல நானும் அழைக்கப்படுவேன்.

மொழி பெரும் பிரச்சினையாக இருக்கும். இங்கு பழகிக்கொண்ட வட்டார வழக்கை அங்கு பேச வேண்டியிருக்கும். அதனால் கேலிக்கு உள்ளாக்கப்படலாம். மேலும் கடந்த முப்பது ஆண்டுகளாக எந்தப் பண்பாட்டுத் தொடர்பும் இல்லை. அங்கு சென்றாலும் அந்நியத் தன்மைதான் ஆட்கொள்ளும். கொஞ்ச காலத்திற்கு முன்பு சென்ற நண்பர்கள் சொல்லக் கேட்டிருக்கிறேன். அதாவது இந்தியக்காரன் என்பார்களாம். மேலும் ஓடிப்போனவன், கள்ளத் தோணி, தோட்டக்காட்டான் என்று நக்கலாக அழைப்பார்களாம். இங்கு வந்தால் என்னைச் சிலோன்காரன் என்பார்கள். இங்கு நான் யோசிப்பது நான் எந்த ஊர்க்காரன்? ஐரோப்பாவிற்கு இடம் பெயர்ந்தவர்கள்மீது இவ்வளவு வசவு இருக்குமா என்று தெரியவில்லை. ஆக, மீள் குடியேற்றம் அந்நியத்தன்மை வாய்த்ததாக மாறி அகத்திலும் புறத்திலும் நிலையான வலியை உருவாக்கிக்கொண்டே இருக்கும்.

**உலகம் முழுக்கப் பெரும் போர் அழிவுகளுக்குப் பின்னால் புதிய வகை கலை இலக்கியங்கள் உருவான போக்கை வரலாற்றில் பார்க்கிறோம். இரண்டாம் உலகப்போருக்குப் பின் புதியவகைத் திரைப்படம், ஓவியம், இசை என எல்லாவற்றிலும் மாற்றம் ஏற்பட்டது. அவ்வகையில் ஈழப்போருக்குப் பிறகும் காத்திரமான படைப்புக்கள் வர ஆரம்பித்துவிட்டன அல்லவா? நீங்கள் வாசகனாய், ஓர் எழுத்தாளராய், வந்துகொண்டிருக்கும் படைப்புகள் குறித்த உங்களது பார்வையைப் பகிர்ந்துகொள்ளுங்கள்.**

முதலில் என்னை எழுத்தாளன் என்று சொல்லிக்கொள்ள விரும்பவில்லை. முன்கேள்விகளிலேயே பதில் சொல்லியிருக்கிறேன். அதாவது வெள்ளாள அரசியல்தான் முன்னும் பின்னும். அவர்களது சித்தாந்தங்களை உள்வாங்கியே படைப்புகள் வெளிவந்தன. மேலும் ஆயுதப் போராட்டம் நடந்துகொண்டிருக்கும்போதே எஸ்.பொ. போன்றவர்களின் குரல் முற்போக்கு, நற்போக்கு என்ற பாதையில் சென்றதையும் பார்க்கிறோம். அதேவேளையில் ஷோபாசக்தி போன்றோர் எழுதும் கலகக் குரலும் உண்டு.

இதிலிருந்து நான் வேறுபடுகிறேன். என்னுடைய இலக்கியப் பார்வை பன்முகத்தன்மை கொண்டது. இலக்கியத்திற்குள்ளும் ஜனநாயகத் தன்மை இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். அதிலும் போக ஈழ இலக்கியத்தை விமர்சிக்கத் தொடங்கிவிட்டாலே சிங்களப் பேரினவாத ஆதரவாளனாக முன்நிறுத்தப்படுவேன். நான் இலக்கியத்தைப் பாதிக்கப்பட்டவர்களின் குரலிலிருந்தே அணுகுவேன். உருவாகி நிலைபெற்றுள்ள உலகமயமும் தாராளமயமும் வலதுசாரிச் சிந்தனையையே ஆதரிக்கின்றன. இதனடிப்படையில் இலக்கியமும் ஒற்றைத்தன்மையானதாகவே இருக்கிறது. சிங்கள இலக்கியமும் ஒற்றைத்தன்மையானதே. பௌத்த அரசியலுக்கு மாற்றாக சைவ சித்தாந்தத்தை முன்வைக்கும் போக்கு உருவாகியிருக்கிறது. அரசியலில் ஒற்றைத் தன்மை இருக்கலாம், ஆனால் இலக்கியத்திற்குள் இருக்கக்கூடாது.

ஈழ இலக்கியத்தைப் பொறுத்தவரை வெள்ளாள மேட்டிமையே மேலோங்கியிருப்பதைப் பார்க்கிறோம். அது பன்முகத்தன்மை அடையவில்லை என்பதுதான் விமர்சனம். இன்னும் பல விடயங்கள் பதிவாகவே இல்லை. போரில் பாதிக்கப்பட்டது இரண்டே இரண்டு தரப்புதான்.

புலிகள் இயக்கத்திற்குள் கீழ்மட்டத்திலிருந்தவர்கள். அதாவது, புனர்வாழ்வு மையத்திற்குப்போனதால் அங்கு சித்திரவதை செய்யப்பட்டு ஊனமானவர்கள், அநாதையானவர்கள், வறியவர்கள், அன்றாட ஜீவியத்திற்கே கடினப்படக்கூடியவர்கள். ஒரு காலத்தில் துப்பாக்கியோடு அதிகாரத்திலிருந்தவர்களைச் சமூகமே புறக்கணித்துவிட்டது. அடுத்து, தமிழ்நாட்டில் வாழும் அகதிகள்.

இந்த இரண்டு தரப்பாரின் வாழ்வும் ஒன்றுதான். அவர்கள் சொந்தநாட்டில் அநாதைகளாக இருக்கிறார்கள். தமிழகத்தில் மறுவாழ்வே இல்லாமல் அந்தரத்தில் தொங்குகிறார்கள். இப்போது நாம் கேள்வியைக் கேட்கலாம். ஈழ இலக்கியத்தில் இவர்களைப் பற்றிய பதிவு எங்கே? வந்த நாவல்களில், பேசப்பட்ட இலக்கியங்களில் முற்றிலும் இவர்களைக் குறித்து எதுவும் இல்லை. கொஞ்சம் வெளிப்பட்டிருந்தாலும் சிறுபான்மையே. எந்த எழுத்தாளரும் தமிழக அகதிகள் குறித்து ஒரு வரிகூட எழுதவே இல்லை. *'Dead silence'* நிலவுகிறது.

ஈழ இலக்கிய விமர்சனப் பார்வையானது ஈழ ஆதரவு, ஈழ எதிர்ப்பு என்கிற நிலையில் இரண்டாக வெளிப்படுகிறது. இந்த இரண்டுமே ஆபத்தானவை.

**இறுதிக் கேள்வி. எழுதாமல் இருந்திருந்தால் பத்திநாதன் என்னவாகியிருப்பார்?**

திருநங்கை உள்ளுக்குள் தன்னுடைய உறுப்பைச் சிதைத்துவிட்டு உண்மையை உலகிற்குக் காட்ட வேண்டும் என்று சதாகாலமும் துடித்துக்கொண்டே இருப்பாரல்லவா? அதுபோன்றவொரு அவஸ்தையில் நானும் வாழ்ந்தேன். சதா காலமும் அகதி என்கிற சொல் துரத்திக்கொண்டே இருந்தது. இது, அகதியாகிப் போனவர்களுக்குக் கிடைத்த சாபக்கேடு. எழுதாமல் இருந்திருந்தால் மனநோய் முற்றி இறந்துபோயிருப்பேன்.

மின்னஞ்சல்: arivusallo@gmail.com

# காலமானார்
# ஆர். சீதாராமன் பிள்ளை

வேதாரண்யம், அக். 8: நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகேயுள்ள கோடியக்கரையைச் சேர்ந்த ஆர். சீதாராமன் பிள்ளை (80) தனது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை காலமானார்.



காலமான சீதாராமன், இளமைக் காலத்தில் இலங்கை, வல்வெட்டித் துறையில் பெட்ரோல் விற்பனை நிலையத்தில் பணியாற்றியவர். இவருடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட அந்த இயக்கத்தினர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் 1984-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் பயிற்சி பெற்றபோது அவர்களுக்கு உதவியாக இருந்தவர்.

உலகத் தமிழர் பேரவை அமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரின் நெருங்கிய நண்பரான இவருக்கு மனைவி தனபாக்யம், மகன்கள் ரெத்தினகுமார், ஆனந்தகுமார் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர். இவரது இறுதி ஊர்வலம் கோடியக்கரை, கீழத்தெருவில் உள்ள அவரது இல்லமான குமரப்பா காட்டேஜில் இருந்து புதன்கிழமை மாலை 4 மணிக்கு புறப்படுகிறது. தொடர்புக்கு: 6374663769.

சீமான் இரங்கல்: நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரன் ஈடுபட்டபோது, அளப்பரிய உதவிகளை செய்தவர்' என தெரிவித்துள்ளார்.

# காலமானார்
# ஆர். சீதாராமன் பிள்ளை

வேதாரண்யம், அக். 8: நாகை மாவட்டம், வேதாரண்யம் அருகேயுள்ள கோடியக்கரையைச் சேர்ந்த ஆர். சீதாராமன் பிள்ளை (80) தனது இல்லத்தில் செவ்வாய்க்கிழமை காலமானார்.



காலமான சீதாராமன், இளமைக் காலத்தில் இலங்கை, வல்வெட்டித் துறையில் பெட்ரோல் விற்பனை நிலையத்தில் பணியாற்றியவர். இவருடன், விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் உள்ளிட்ட அந்த இயக்கத்தினர் நெருங்கிய தொடர்பு வைத்திருந்தனர். விடுதலைப் புலிகள் இயக்கத்தினர் 1984-ஆம் ஆண்டுகளில் தமிழகத்தில் பயிற்சி பெற்றபோது அவர்களுக்கு உதவியாக இருந்தவர்.

உலகத் தமிழர் பேரவை அமைப்பின் தலைவர் பழ. நெடுமாறன், மதிமுக பொதுச் செயலாளர் வைகோ உள்ளிட்டோரின் நெருங்கிய நண்பரான இவருக்கு மனைவி தனபாக்யம், மகன்கள் ரெத்தினகுமார், ஆனந்தகுமார் மற்றும் மூன்று மகள்கள் உள்ளனர். இவரது இறுதி ஊர்வலம் கோடியக்கரை, கீழத்தெருவில் உள்ள அவரது இல்லமான குமரப்பா காட்ரேஜில் இருந்து புதன்கிழமை மாலை 4 மணிக்கு புறப்படுகிறது. தொடர்புக்கு: 6374663769.

**சீமான் இரங்கல்:** நாம் தமிழர் கட்சியின் ஒருங்கிணைப்பாளர் சீமான் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியில், 'தமிழ் ஈழ விடுதலைப் போராட்டத்தில் தலைவர் பிரபாகரன் ஈடுபட்டபோது, அளப்பரிய உதவிகளை செய்தவர்' என தெரிவித்துள்ளார்.